## சுருக்கம்

சிலைகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் வட்டம் – அசூர் கிராமம் – புல எண். 144/6சி2– 0.00.75 ஹெக்டேர் நஞ்சை நிலம் – 35 சதுர மீட்டர் பரப்பளவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 7 ¼ அடி உயரமுள்ள வெண்கலச் சிலையினை அமைத்தல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.66 நாள்: 02.06.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் (சி.3) துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி.2) துறை, நாள் 23.11.1998.
3. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க.எண்.2710/2010/த.1, நாள் 28.05.2010.

* * * * *

ஆணை:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அசூர் கிராமத்தில் புல எண்.144/6சி2–இல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் வெண்கலச் சிலையினை அமைக்க அனுமதி வழங்குமாறு மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.ஜி.எம். ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மனு செய்துள்ளார். மேலும், மேற்படி சிலை நிறுவுவதற்கான மற்றும் பராமரிப்பிற்கான செலவுகளை அனைத்தையும் தானே ஏற்றுக்கொள்வதோடு, பாதுகாப்பு அரண் அமைத்தும், சிலை மதிப்பிற்குண்டான தொகையை அரசுக்கு வைப்புத் தொகையாக செலுத்தவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

2. அசூர் ஊராட்சி மன்றம், 23.03.2010 அன்று நடைபெற்ற அசூர் ஊராட்சி மன்றக் கூட்டத்தில், அசூர் கிராமத்தில் மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஜி.எம்.வாண்டையார் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் புல எண். 144/6சி2–இல் 7 ¼ அடி உயரமுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் வெண்கலச் சிலை அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**3.** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அசூர் கிராமத்தில் புல எண். 144/6சி2–இல் 0.00.75 ஹெக்டேர் நஞ்சை நிலத்தில் 35 சதுர மீட்டர் பரப்பளவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 7 ¼ அடி உயரமுள்ள வெண்கலச் சிலையினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் அசூர் கிராமம், சித்திவிநாயகர் நகர் என்ற பகுதியில் தஞ்சாவூர்–அசூர் பை–பாஸ் நெடுஞ்சாலையில் தார் ரோட்டிற்குத் தெற்கில் சாலையை ஒட்டி அமைந்துள்ளது என்றும், மேற்படி இடத்திற்குக் கிழக்கில்

..2..

கூரையால் ஆன வெல்டிங் ஒர்க்ஷாப்பும், மேற்கில் காலியிடமும் அதனைத் தொடர்ந்து குடியிருப்புப் பகுதிக்குச் செல்லும் இணைப்புச் சாலையும் வடக்கில் தஞ்சாவூர்–அசூர் பை–பாஸ் நெடுஞ்சாலையும் தெற்கில் காலியிடமும் அதனைத் தொடர்ந்து குடியிருப்பு வீடுகளும் உள்ள இடத்தில் மேற்படி சிலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், மேற்படி இடத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சிலையினை அமைப்பதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்றும் கும்பகோணம் வட்டாட்சியர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், மேற்படி சிலையினை அமைக்க அனுமதி வழங்கலாம் என்று கும்பகோணம் வருவாய் கோட்ட அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தனது அறிக்கையில், மேற்படி புலத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் வெண்கலச் சிலையினை அமைக்க மேற்குறிப்பிட்டுள்ள இடத்தைத் தவிர மாற்று இடம் ஏதுமில்லை என்று தெரிவித்துள்ள சூழ்நிலையில் அதே இடத்தில் தேவர் சிலை அமைக்கப்படும் பட்சத்தில் இப்பகுதியில் நிலவி வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் நிபந்தனைகளுடன் அரசு நிபந்தனைகளையும் இணைத்து கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்படுகிறது:-

1. தேவர் சிலை நிறுவும் இருப்பிடத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட வேண்டும்.

2. தேவர் சிலை மற்றும் பீடம் ஆகியவற்றைச் சுற்றி ஸ்டெயின்லெஸ் ஸ்டீலிலான பாதுகாப்புடன் கூடிய, மற்றவர்களால் சிலைக்கோ, பீடத்திற்கோ சேதம் ஏற்படாதவாறு அரண் அமைக்கப்பட வேண்டும்.

3. 24 மணி நேரமும் மேற்படி சிலைக்குப் பாதுகாப்பிற்காக தனியார் காவலர்களைக் கொண்டு பாதுகாப்பு செய்யப்படவேண்டும்.

4. சிலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

5. கண்காணிப்பு கேமரா அமைக்கப்பட வேண்டும்.

6. தேவர் சிலையை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் அமைத்து வைக்க வேண்டும்.

7. சிலை அமைக்க குழு ஒன்று அமைக்க வேண்டும். சிலையை இக்குழுவினரே பராமரிப்பு செய்ய வேண்டும். பராமரிப்பு செலவினை அவர்களே ஏற்று சரி செய்து கொள்ள வேண்டும்.

8. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வண்ணம் சாலை மற்றும் பொது வழிகளிலிருந்து தகுந்த இடைவெளியுடன் சிலை அமைய வேண்டும்.

9. பொதுமக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறு நேராத வண்ணம் சிலை அமைக்க வேண்டும்.

..3..

10. இச்சிலை அமைக்கப்படவுள்ள பகுதியில் நெடுஞ்சாலை பகுதியினை எதிர்காலத்தில் வேறு ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது.

5. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மேற்படி சிலையினை அமைக்க மேலே பத்தி–4–இல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என்றும், கும்பகோணம் வருவாய் கோட்ட அலுவலர் மேற்படி சிலையினை அமைப்பதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லை மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளதாலும் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அசூர் கிராமத்தில் மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் தலைவர் திரு. ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் புல எண். 144/6சி2–இல் 0.00.75 ஹெக்டேர் நஞ்சை நிலத்தில் 35 சதுர மீட்டர் பரப்பளவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 7 ¼ அடி உயரமுள்ள வெண்கலச் சிலையினை அமைத்திட அனுமதி வழங்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில் மேற்படி இடத்தில் தேவர் சிலையினை அமைக்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துருவின்மேல் உரிய ஆணை வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நிறுவப்படும் சிலைகள் வெண்கலத்தால் ஆனதாக இருந்தால் மட்டுமே சிலை நிறுவ அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று 12.06.1995 நாளிட்ட அரசு கடித எண்.15611/சி3/94–6ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 23.11.1998 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.248–ல் சிலைகள் வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மேற்கண்ட அறிவுரைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

8. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்று, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அசூர் கிராமத்தில் புல எண். 144/6சி2–இல் 0.00.75 ஹெக்டேர் நஞ்சை நிலத்தில் 35 சதுர மீட்டர் பரப்பளவில் 7 ¼ அடி உயரமுள்ள வெண்கலத்தாலான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சிலையினை மேலே பத்தி–4–இல் கூறப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அமைக்க அனுமதி வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்(பொறுப்பு).

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
**சென்னை—15.**

**..4..**

மாவட்ட ஆட்சித்தலைவர்,
தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர் மாவட்டம்.
<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.